DW 1 - திருமதி.பிரபலதா

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப் பட்டு புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் 2019 ஆம் ஆண்டு கணக்கு எண்.38199251693 ரூ.7 இலத்திற்கு தனி நபர் கடன் வாங்கினேன் என்றால் சரிதான். அதற்கான வட்டி விகிதம் மற்றும் திரும்பி செலுத்தும் முறை ஆகிய விபரங்கள் எனக்கு வங்கினால் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். வங்கியில் சொன்ன விதிமுறைகளை தெரிந்தும் மற்றும் ஒப்புக்கொண்டு நான் கையொப்பம் செய்து கடன் பெற்றேன் என்றால் சரிதான். நான் ஒப்புக்கொண்டபடி மாதம் மாதம் தவணை தவறாமல் செலுத்தினேனா என்றால் 8 தவணை செலுத்தினேன். அதன் பின் சம்பளம் இல்லாததால் செலுத்த முடியவில்லை. சம்பளம் எனக்கு இடையில் வராமல் இருந்தால் தவணை தொகை செலுத்த தேவையில்லை என்று ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிடப்பட்டு இருந்ததா என்றால் இல்லை. எனக்கு சம்பளம் வந்தாலும், வராமல் இருந்தாலும் நான் தவணை தொகை செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரிதான்.

2) முதல் விசாரணையில் கோவிட் சமயத்தில் நான் தவணை செலுத்தவில்லை என்று சொல்லியுள்ளதற்கு வங்கியில் மனு எதுவும் தாக்கல் செய்து அதை ஏற்றுக்கொண்டதற்கான மனுவை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாய் மொழியாக தான் சொன்னேன். மனு கொடுக்கவில்லை. காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் கையெழுத்து மட்டும் செய்தேன். அதை நான் பூர்த்தி செய்யவில்லை. வெற்று காசோலை தான் கொடுத்தேன். தவணை தொகையை சம்பள கணக்கிலிருந்து எடுத்துக்கொள்வார்கள். பணமாகவோ, காசோலையாகவோ நான் எந்த தவணை தொகையும் செலுத்தினேனா என்றால் செலுத்தவில்லை. புகார்தாரர் வங்கியால் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டு அதை நான் பெற்றேன் என்றால் ஆமாம். அந்த அறிவிப்பிற்கு நான் பதிலறிப்பு செய்தேனா என்றால் அறிவிப்பு பெற்று இரண்டு நாட்களுக்கு பிறகு நான் வங்கி மேலாளரை நேரடியாக பார்த்து காசோலை தொகையை செலுத்துவதாக சொன்னேன். மொத்த பணத்தையும் செலுத்தவேண்டும் என்று சொன்னார்கள். அதன் பின்னிட்டு நான் பதிலறிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. உண்மையில் நான் சொன்னவாறு இரண்டு நாட்களில் வங்கிக்கு சென்று பணத்தை செலுத்துவதாக சொல்வது பொய் என்றால் தவறு. 2024 ஆம் ஆண்டில் நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.06.05 18:12:29 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.